



புதுக்கோட்டை மாவட்டக் கழகம் சார்பாக, மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்ற மாநகரச் செயலாளர் ஆ.செந்தில் அவர்களின் திருவுருவப்பட திறப்பு விழா நிகழ்ச்சியில், கழக முதன்மைச் செயலாளரும், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான கே.என்.நேரு பங்கேற்று திருஉருவப் படத்தை திறந்து வைத்து புகழுரையாற்றினார். இந்நிகழ்வில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தொழிலதிபர் எஸ்.ராமச்சந்திரன், எம்.எம்.அப்துல்லா எம்.பி., டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், த.சந்திரசேகரன், அரு. வீரமணி, வி.என்.மணி, சுப.சரவணன், மிசா ராமநாதன், எஸ்.திருஞானசம்பந்தம், எம்.எஸ்.அசோக் பாண்டியன், பரணி இ.ஏ.கார்த்திகேயன், கே.ஆர்.என்.போஸ், எம். லியாகத் அலி, எஸ்.எஸ்.கருப்பையா, பெ.ராஜேஸ்வரி, க.மதியழகன், சு.சண்முகம். தவ.பாஞ்சாலன், வி.முருகேசன், ராம.சுப்புராம், த.செங்கோடன், எஸ்.சங்கர், மாத்தூர் எஸ்.கே.கலியமூர்த்தி, மு.அறிவொளி, கிட்டு, இளமதி அசோகன், கரு.வெள்ளை நெஞ்சன், இரா. தமிழ்ச்செல்வன், எஸ்.ஏ.முகம்மது அஸ்ரப் அலி, எம்.அப்துல் கனி, எம்.ராஜகோபால், நியாஸ் அகம்மது, துரை.முகம்மது, முகம்மது ஜான், மு.அப்துல் ஜப்பார், வீ.மு.வளத்தான், கே.எஸ்.சந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், அ.ரெத்தினம், க.நைனா முகம்மது, எம்.எம்.பாலு மற்றும் ஒன்றிய, நகரக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பேரூராட்சி தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர், நிர்வாகிகள், மாநகர அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வர்த்தகர்கள், கழக முன்னோடிகள் அனைத்து கட்சியினர் புகழஞ்சலி செலுத்தினார்கள்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில்

# ரூ. 6 கோடியே 62 இலட்சம் மதிப்பீட்டில் துறைச் சார்ந்த அரசு கட்டடங்கள்!

## உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் திறந்து வைத்தார்!

தஞ்சாவூர், ஜன.6

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு, திருவோணம், மதுக்கூர், பட்டுக்கோட்டை, பேராவூரணி, மற்றும் சேதுபாவாசத்திரம் ஒன்றியங்களில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் நேற்று முன்தினம் (04.01.2025) திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் தலைமையில் நடைபெற்றது.

தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை. சந்திரசேகரன் (திருவையாறு), கா.அண்ணா துரை (பட்டுக்கோட்டை), என்.அசோக்குமார் (பேராவூரணி) ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு ஒன்றியம் பளாம்புத்தூர் ஊராட்சியில் ரூ.42. 65 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கிராம செயலக கட்டடமும், ரூ.38.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நேரடி நெல் கொள்முதல் நிலைய கட்டடமும், திருவோணம் ஒன்றியம் நெம்மேலி திப்பியகுடி ஊராட்சியில் ரூ.30.55 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடமும், அடம்பை ஊராட்சியில் ரூ.13.37 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மைய கட்டடமும், வெட்டுவகோட்டை ஊராட்சியில் ரூ.12.70 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும், ரூ.16.45 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மைய கட்டடமும், அக்கரைவட்டம் ஊராட்சியில் ரூ.13.75 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொது விநியோகக் திட்ட கட்டடமும், ரூ.15.27 இலட்சம் மதிப்பீட்டில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க கட்டடமும்,

மதுக்கூர் ஒன்றியம் கன்னியாக்குறிச்சி ஊராட்சியில் ரூ.12.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும், புலவஞ்சி ஊராட்சியில் ரூ.30.10 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடமும், வட்டகுடி ஊராட்சியில் ரூ.42.95 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கிராம செயலக கட்டடமும், பட்டுக்கோட்டை ஒன்றியம் புதுக்கோட்டை உள்ளூர் ஊராட்சியில் ரூ.16.55 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மைய கட்டடமும், ரூ.12.70 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும்,

பட்டுக்கோட்டை நகராட்சியில் ரூ.64.00 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்'பள்ளி கட்டடமும், கார்கவயல் ஊராட்சியில் ரூ.12.70 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும், பேராவூரணி ஒன்றியம் பலதாளி ஊராட்சியில் ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும், பெயின்கால் ஊராட்சியில் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மைய கட்டடமும், திருச்சிற்ற ம்பலம் ஊராட்சியில் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில்புதிய அங்கன்வாடி மைய கட்டடமும், துறவிக்காடு ஊராட்சியில் ரூ.42.65 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கிராம செயலக கட்டடமும்,

சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பூவானம் ஊராட்சியில் ரூ.20.13 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் குழுவிற்கான பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க கட்டடம், பூக்கரம்பை ஊராட்சியில் ரூ.30.10 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடமும், முடச்சிக்காடு ஊராட்சியில் ரூ.5.68 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொது விநியோகக் திட்ட கட்டடமும், மரக்கவசை ஊராட்சியில் ரூ.12.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பொதுவிநியோகக் திட்ட கட்டடமும், அடைக்காதேவன் ஊராட்சியில் ரூ.23.62 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடமும்,

திருவதேவன் ஊராட்சியில் ரூ.42.65 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கிராம செயலக கட்டடமும், குருவிக்கரம்பை ஊராட்சியில் ரூ.23.57 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடமும் என மொத்தம் ரூபாய் 6 கோடியே 62 இலட்சத்து 17 ஆயிரம் மதிப்பீட்டில் திட்டப் பணிகளை துவக்கி வைத்து உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர்.கோவி. செழியன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இன்றைய தினம் ஒரத்தநாடு, திருவோணம், மதுக்கூர், பட்டுக்கோட்டை, பேராவூரணி, மற்றும் சேதுபாவாசத்திரம் ஒன்றியங்களில் ரூபாய் 6 கோடியே 62 இலட்சம் மதிப்பிலான திட்டப் பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக துவக்கி வைக்கப்பட்டுள்ளது. கிராமப்பு றங்களில் மேம்பாடு பெற வேண்டும் என்ற நோக்கில் தமிழக அரசு இத்திட்டங்களை விரைந்து செயல்படுத்தி உள்ளது.

அங்கன்வாடி மைய கட்டடம், பொதுவிநியோகக் திட்ட கட்டடம், ஊராட்சி மன்ற அலுவலக க் கட்டடம், கிராம செயலக கட்டடம், அங்கன்வாடி மைய கட்டடம், நேரடி நெல்கொள்முதல் நிலைய கட்டடம் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க கட்டடம் போன்ற சிறப்பான திட்டப் பணிகளுக்கான புதிய கட்டடங்கள் துவக்கி வைக்கப் பட்டுள்ளது.

மேலும், கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் மகளிருக்கு மாதம் ரூ.1000 உயர் கல்வி பெறுகிற மாணவிகளுக்கு மாதம் ரூ.1000, தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு ரூ.1000 போன்ற திட்டங்களும், மக்களைத் தேடி மருத்துவம், "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" போன்ற திட்டங்கள் முன்னேற்ற திட்டங்களாக திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது. பொதுமக்கள் அனைவரும் இதுபோன்ற திட்டங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.ராமச்சந்திரன், கே.டி. மகேஸ் கிருஷ்ணசாமி, மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி. ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, வருவாய் கோட்டாட்சியர் திருமதி.இலக்கியா (தஞ்சாவூர்), செல்வி.ஜெயஸ்ரீ (பட்டுக்கோட்டை), ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் செல்வராஜ், ஒன்றிய குழுத் தலைவர்கள் திருமதி. சி.பார்வதி சிவசங்கர் (ஒரத்தநாடு), கி.முத்துமாணிக்கம் (சேதுபாவாசத்திரம்), வட்டாட்சியர்கள் திருமதி.சுந்தர செல்வி (ஒரத்தநாடு), பாக்யராஜ் (பட்டுக்கோட்டை), திருமதி.தெய்வாணை (பேராவூரணி), வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோவில் ஒன்றியம் ஆக்கூர் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி துறை சார்பில் கட்டப்பட்டுள்ள உணவு தானிய கிடங்கினை (ரேசன் கடையை) பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்து, குடும்ப அட்டை தாரர்களுக்கு குடிமை பொருட்களை வழங்கினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமா மகேஸ்வரி சங்கர், ஒன்றியக் கழகச் செயலாளர் பி.எம்.அன்பழகன், எம்.அப்துல் மாலிக், அமிர்த.விஜயகுமார் மங்கை எம்.சங்கர், செம்பனார்கோவில் ஒன்றியக்குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர், ஒன்றியக்குழு துணைத் தலைவர் பாஸ்கரன் ஊராட்சிமன்றத் தலைவர் சந்திரமோகன் மற்றும் பலர் உள்ளனர்.

# பிள்ளைகள் முன்பாக நாம் நூல்களைப் படிக்கத் தொடங்கினால், அவர்களும் தானே படிக்க முன் வருவார்கள்!

## சென்னை 48-வது புத்தகக் காட்சியில் திராவிட இயக்க ஆளுமை வாசகர்கள் கலந்துரையாடலில் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் பேச்சு!






சென்னை 48-வது புத்தகக் காட்சியில் திராவிட இயக்க ஆளுமை வாசகர்கள் கலந்துரையாடலில் பேராசிரியர் சுப.வீ. பேச்சு!

சென்னையில் நடைபெறும் 48-வது புத்தகக் காட்சியில் திராவிட இயக்க ஆளுமை ஒருவருடன் தினந்தோறும் வாசகர்கள் கலந்துரையாடும் நிகழ்ச்சியை முத்தமிழறிஞர் பதிப்பகம் நடத்தி வருகிறது.

(3.1.2025) அன்று திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள் பங்கேற்று வாசகர்ளுடன் உரையாடினார்.

அவர் பேசியதில் இருந்து...

நாள்தோறும் நடப்பில் இருக்கும் செய்திகள், நாளேடுகள், வார இதழ்கள் போன்றவைதான் இன்று என் அறிவுப் பரப்பை விரிவு செய்துள்ளது என்பதை என் அனுபவத்தினால் உணர்கிறேன். எனவே, நூல்களை நாள்தோறும் வாசிக்கும் திறனை இன்றைய காலக்காட்டத்தில் அதிகரிக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

### முதலில் நாம் மாற வேண்டும்

ஒரு கூட்டத்திற்கு உரையாற்ற சென்றபோது ஓர் அன்பர், பிள்ளைகளைப் படிக்கவைக்க, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். `முதலில் நீங்கள் படிக்க வேண்டும்! அதுவும் உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக அவர்களின் பார்வையில் படும்படி படிக்க வேண்டும்' என்றேன்.

நாம் என்ன செய்கிறோமோ அதையே அச்சிறுவர்களும் செய்வார்கள். பிள்ளைகளிருக்கும்போது கைப்பேசியையும் தொலக்காட்சியையும் நாம் பார்த்திருந்தால், அதையே அவர்களும் செய்வர். எனவே, அவர்களுக்கு எதிரே நாம் நூல்களைப் படிக்கத் தொடங்கினால், அவர்களும்தானே படிக்க முனைவர்.

இதனாலேயே, இன்றைய பிள்ளைகளிடம் குறைந்து காணப்படும் வாசிப்புப் பழக்கத்திற்கு நாமே ஒரு காரணமாக அமைகின்றோம். எனவே, பிள்ளைகளுக்கு முன்மாதிரியாய் முதலில் நாம் இருக்க வேண்டும். அதுபோலத் தான் நம் இயக்கத் தோழர்களும் மற்றவர்களுக்குச் சொல்லிலும் செயலிலும் முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

ஆயிரம் முறை விடைகள் சொன்ன கேள்வியைத்தான், இன்றளவும் நாம் இன்னும் நிறைய விடைகளைத் தேடிக்கொண்டிருக்கிறோம். இதில், நம் திராவிட இயக்கம் மட்டும் விதிவிலக்கன்று.

### மறைந்தும் மறையாத மறைகள் !

கலைஞர் மறைந்து ஏழாண்டுகளும் தந்தை பெரியார் மறைந்து ஐம்பதாண்டுகள் ஆயினும், நேற்று முளைத்த அரசியல் கட்சியினரும் அவர்களின் தாக்குதலுக்கு உள்ளாக்குகிறார்கள் எனில், இன்றளவிலும் தலைவர் கலைஞரும் தந்தை பெரியாரும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

நாம் மட்டுமன்று, நம்முடைய அடுத்தத் தலைமுறையினரும் இவற்றை அறிய வேண்டும். 'ஈராயிரக் குழவியர்' என்றழைக்கப்படும் இன்றய இளைய தலைமுறையினரிடம் இவை போன்ற விழிப்புணர்வுகள் இல்லாமல், சற்றே விலகியிருக்கிறார்கள்.

### திராவிடக் கருத்தியல்

திராவிடக் கருத்தியல்களை இன்றைய தலைமுறையினருக்கு மீள எடுத்துக்கூறுவதில், நமக்குத் தலையாயக் கடமை உள்ளது. ஒத்தக் கருத்துடையவர்கள் மட்டுமே கலந்துபேசுவதைக் காட்டிலும், மாற்றுக் கருத்துடையவர்களோடும் கலந்துபேசினால்தான், இன்னும் பல விடைகளுக்குப் புதிய கேள்விகள் உருவாகும்.

இவற்றை எடுத்துப் பரப்புரைக்கத்தான் பதிப்பகங்கள், கலந்துரையாடல்கள், பொதுக்கூட்டங்கள் போன்றவை காலக் கருவிகளாக அமைகின்றன.



ஈரோடு மாநகராட்சி பெரியார் நகர் E பிளாக் குடியிருப்பு பகுதியில் குடிநீர் குழாய் அமைக்கும் பணியினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநகராட்சி ஆணையாளர் மனிஷ், மண்டல தலைவர் சசிகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.